ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1709/4 - 2011 ජුනි 06 වැනි සඳුදා - 2011.06.06
*1709/4 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் - 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின்*

*ஆயுர்வேத மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகள் நியதிச்சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011 மே மாதம் 10 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டி. சிறிசேன,*
*மாகாண சபை செயலாளர்.*
*ஊவா மாகாணம்.*

*மாகாண செயலகம்,*
*ஊவா மாகாண மாகாண சபை,*
*இராஜ வீதி,*
*பதுளை,*
*2011, மே 25.*

### 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய சேவைச் சட்டம்

*ஊவா மாகாண மக்களின் ஆரோக்கியத்தை முன்னிட்டு தேசிய ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி ஆகிய வைத்திய முறைமைப் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் விசாலமாக்கல் சம்பந்தமாக ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் ஆயுர்வேத ஆணையாளர் உட்பட ஏனைய உறுப்பினர்களை ஆயுர்வேத வைத்தியசாலைக்கான வைத்தியசாலைச் சங்கம், முகாமைத்துவ பயிற்சி சபை, ஆயுர்வேத பரிசீலனை சபை மற்றும் ஆலோசனை சபை நிறுவுதல் மற்றும் அவற்றை நிர்வாகம் செய்தல் இதற்கு அவசியமான ஏனைய கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பான விதிமுறைகளை திட்டமிடுவது சம்பந்தமாக உருவாக்கப்படும் சட்டவியல்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபை இவ்வாறு செயற்படுகிறது:-*

*சுருக்கப் பெயர் மற்றும் நடைமுறைப்படுத்தும் திகதி.*

*1. இச் சட்டம் ஊவா மாகாணத்தின் 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வகிக்கும் ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய சேவை சட்டமாக அறிமுகபடுத்துவதோடு, ஊவா மாகாண ஆளுநரால் அனுமதி அளிக்கப்படும் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

*மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவி ஒன்றை உருவாக்கல்.*

*2. இப்பகுதியில் காணப்படும் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றி கொள்ளல் சம்பந்தமாக (இப்பகுதியில் திணைக்களமாக குறிப்பிடப்படும்) ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவி ஒன்று இதன் மூலம் உருவாக்கப்படும்.*

*மாகாண ஆயுர்வேத ஆணையாளர்.*

3. (1) இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மாகாண ஆயுர்வேத அணையாளர் அப் பதவி மற்றும் பெயர் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் தலைவராவர் ;

(2) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் இலங்கை ஆயுர்வேத சேவை வைத்திய அதிகாரி ஒருவராக இருக்க வேண்டியதோடு, அவர் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 32 ஆவது பிரிவின்படி ஊவா மாகாண ஆளுநரான நியமனம் செய்யப்படுவார் ;

(3) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ஊவா மாகாண சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவம் மற்றும் கட்டளையின் கீழ் சுயாதீனமாக நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

*ஏனைய அதிகாரிகள் அல்லது உத்தியோகத்தர்களை நியமித்தல்.*

4. (1) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் தமது திணைக்களத்தின் வேலைகளை பூர்த்தி செய்து கொள்வது தொடர்பாக தேவைப்படும் என கருதும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு தொடர்பாக, தேவைப்படும் பிரதி ஆயுர்வேத ஆணையாளர் மற்றும் உதவி ஆயுர்வேத ஆணையாளர் உட்பட வேறு அதிகாரிகள் ஆயுர் வேத நிகழ்ச்சி உதவியாளர்கள் தேவைக்கேற்ப ஊவா மாகாண ஆளுநர் ஊவா மாகாண அரச சேவை ஆணையாளர் சபையினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவியில் இருந்து சேவையாற்றிய அனைத்து அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இச்சட்டத்தின் கீழ் நியமம் செய்யப்பட்டவர்களாக கணக்கிலெடுக்கப்படுவர்.

*குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்.*

5. ஊவா மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்படும் நியதிகளின் கீழ் பின்வரும் தூர நோக்குகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக மாகாண ஆயுர்வேத ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்வார். அவ்வாறாயின்,-

(1) மக்களின் ஆரோக்கிய நிலைமையை முன்னிட்டு சுகாதார பாதுகாப்பு மற்றும் சிசிக்சை வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் அடிப்படை சுகாதார அபிவிருத்தி தொடர்பாக தேவையான நிலையங்களை உருவாக்கல் மற்றும் சேவைகளை வழங்கல்.

(2) பிரதேச செயலாளர் கோட்ட மட்டத்தில் ஆயுர்வேத மக்கள் சுகாதார வழங்கல் பிரிவுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான வசதிகளை வழங்கல் ;

(3) ஆயுர்வேத முறைமைக்கேட்ப நோயை பரீட்சித்தல் மற்றும் மக்கள் சுகாதார அபிவிருத்தி சம்பந்தமாக செயலாற்றல் அதற்கு பலமளித்தல் ;

(4) திணைக்கள சேவையில் உள்ள அல்லது சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானித்துள்ள நபருக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் ஏனைய வசதிகளை செய்துகொடுப்பதோடு ஆயுர்வேதம் சம்பந்தமான பயிற்சி நெறிகளை வழங்குவதோடு பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு நிதி உதவி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதோடு ஆயுர்வேத கல்வி மற்றும் அது சம்பந்தமான பரிசீலனை நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்கல் ;

(5) பாரம்பரிய மற்றும் தேசிய வைத்திய முறைமையை பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் மற்றும் அவற்றின் நிலைமையை அபிவிருத்தி செய்தல் ;

(6) ஊவா மாகாணத்திற்கு உரித்தான பாரம்பரிய வைத்திய அறிவை ஓலைச்சுவடிகளை மற்றும் வைத்திய அறிவை ஓலைச்சுவடிகளை, மற்றும் வைத்திய உபகரணங்களை மற்றும் வைத்திய உபகரணங்களை பாதுகாத்தலையிட்டு மாகாண ஆயுர்வேத நூதனசாலை ஒன்றை நிறுவுதல் மற்றும் நடாத்திச் செல்ல தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் ;

(7) மாகாணத்துள் மூலிகைத் தோட்டங்களை மற்றும் நாற்று மேடைகளை நடாத்திச் செல்லல், தேவையான வசதகளை வழங்கல் மற்றும் அதன் கீழ் சுய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆயத்தமாதல் ;

(8) மாகாணத்திற்குத் தேவையான முடிவுற்ற மருந்துகளை மாகாணத்துள் உற்பத்தி செய்தல் தொடர்பாக மாகாண மருந்துகள் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்தல் ;

(9) நடமாடும் தொழில்சாலையுடன் தொடர்பு கொண்டு தேசிய வைத்திய முறைமையை பிரசித்தி செய்வதற்கு வருமானத்தை ஈட்டும் முறைமைகளை உருவாக்கல் ;

(10) மிக அவசியமான மருந்துகளை கொள்வளவு செய்வதற்குத் தேவையான நிலையங்கள் சம்பந்தமாக உதவி செய்தல்.

6. இச்சட்ட விதிமுறைகளின் கீழ் ஆயுர்வேத ஆணையாளர் பின்வரும் அதிகாரங்களுக்கு உரித்துடையவராவார்:- ஆயுர்வேத ஆணையாளரின் அதிகாரம் மற்றும் வேலைகள்.

(1) 5 ஆம் பிரிவில் குறிப்பிட்ட கொள்கைகளை பூர்த்தி செய்து கொள்ளும் போது ஆணையாளரினால் ஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியகம், ஆயர்வேத மருந்தகம், ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், மூலிகைத் தோட்டம் மற்றும் நாற்று மேடை, ஆயுர்வேத நூதனசாலை மற்றும் ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம் மற்றும் மாகாண மாவட்ட, பிரதேச, தேசிய வைத்திய ஆயுர்வேத பராமரிப்பு சபை ஆரம்பித்து நடாத்திச் செல்லல் அல்லது ஆரம்பித்து நடாத்திச் செல்ல வழிவகுத்தல் அல்லது அதற்கான நிதி உதவி வழங்கல் ;

(2) இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு செயற்படுத்தப்படும் நிறுவனங்களினூடாக எழும்பும் தீர்மானங்களை அந்நிறுவனங்களின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தல் ;

(3) இச்சட்டத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் தரவுகள் மற்றும் புள்ளிப் பதிவேடுகளை முறைப்படி மற்றும் திகதிக்கேற்ப கொண்டு செல்லல் ;

(4) இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் அனைத்து நிறுவனங்களும் உயர் தர கொள்கைகளில் மற்றும் நிகழ்கால அங்கீகாரங்களுக்கு ஏற்ப செயற்படுத்தப்படுகின்றனவா என்பதனை பரீட்சித்து அது சம்பந்தமாக காலத்திற்கு காலம் அறிக்கைகளை சமர்ப்பித்தல் ;

(5) மாகாண ஆயுர்வேத மருந்துகள் பராமரிப்பு சபையினால் செயற்படுத்தப்படும் ஆயுர்வேத நிறுவனங்களை அச்சபையின் அங்கீகாரத்திற்கு ஏற்ப பதிவு செய்தல் மற்றும் பதிவுச் சான்றிதழ்களை வெளியிடல் ;

7. இச்சட்டத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளல் சம்பந்தமாக விடய பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கு முகமாக ஆலோசனை சபை ஒன்றை உருவாக்க வேண்டும்.- ஆலோசனை சபை ஒன்றை நிறுவல்.

(1) தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சின் செயலாளர் ;

(2) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ;

(3) மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பு கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் பிரதிநிதி.

(4) நிர்வாக சேவையில் அல்லது கல்விப் பிரிவில் ஓய்வுபெற்ற நிறைவேற்று அதிகாரி ;

(5) மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி.

(6) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உபவேந்தரால் பெயர் குறிப்பிடப்படும் ஆசிரியர் குழுவின் பிரதிநிதி ஒருவர் ;

(7) பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆயுர்வேத பாதுகாப்பு சபை அதிகாரக் குழுவின் அங்கத்தினர் இருவர்.

ஆணையாளரினால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு.

8. 5ஆவது பிரிவின் குறிப்பிட்ட கொள்கைகளை நிறைவேற்றும் போது பாராளுமன்றம் மற்றும் மாகாண சபையினால் அது தொடர்பாக வழங்கப்படும் நிதி மற்றும் ஒதுக்கீடுகளில் ஒரு தொகை அமைச்சரின் பூரண அனுமதியுடன் ஆணையாளரினால்,

(1) மாகாண ஆயுர்வேத கல்வி மற்றும் பயிற்சி முகாமைத்துவக் குழுவுக்கு;

(2) மாகாணத்தின் ஆயுர்வேத பரிசீலனைக் குழுவுக்கு ;

(3) மாகாணத்தின் ஆயுர்வேத மருந்துகள் பராமரிப்புக் குழுவுக்கு ;

(4) ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பு சம்பந்தமாக நிறுவப்பட்டு நடாத்திச் செல்லப்படும் வேறு நிறுவனம் ஒன்றுக்கு ;

(5) ஆயுர்வேத கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து செல்லல் சம்பந்தமாக வேறு யாராவது தகுதியான நபர் அல்லது நபர்களுக்கோ ;

(6) மாகாண மாவட்ட பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபை சம்பந்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினை வழங்க முடியுமானதாக இருத்தல்.

ஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம் மற்றும் ஆயுர்வேத நோய் நிவாரண நிலையங்களை பதிவு செய்யவேண்டியமை.

9. (1) ஓர் இடத்தில் தற்காலிகமாக ஆயுர்வேத ஆரோக்கிய சாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், அல்லது ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையமாக ஆணையாளரினால் பதிவு செய்யப்படும். அவ்விடத்தில் அவ் ஆயுர்வேத ஆரோக்கிய சபை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம் ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலையம் நடாத்திச் செல்லும் நபர் உரிமையாளராக ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்டு இருந்தால் தவிர, மற்றும் அமைச்சரால் அது சம்பந்தமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி முடிவான திகதியில் ஆரம்பித்து அதன் பின் அல்லதுஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலையம் சம்பந்தமாக வேறு எந்த இடமும் சேர்த்துக் கொள்ளலாகாது.

(2) (9.1) ஆம் உப பிரிவின் கீழ், பிரசுரமான அறிவித்தலில் குறிப்பிட்ட திகதி அதன்படி பிரசுரமான திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட திகதியாக அமையக்கூடாது.

(3) இங்கு (9.1) ஆம் உப பிரிவின் விதிகளை மீறி ஆயுர்வேத ஆரோக்கிய சாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி மூலிகைத் தோட்ட ம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம் ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலையங்களின் வேலைகள் சம்பந்தமாக ஏதாவது ஒரு இடம் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவ் ஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத

மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலைய பொறுப்பாளர் அல்லது உரிமையாளர் இக் கொள்கைப் பிரகடணத்தின் கீழ் தவறு செய்தவர் ஆவார். அவ்வாறான தவறு சம்பந்தமாக நீதிபதி ஒருவரின் முன்னிலையில் அத் தவறை செய்தமைக்காக ரூபா பத்தாயிரத்திற்கு குறையாத ரூபா இருபத்தைந்தாயிரத்திற்கு மேற்படாத தண்டப்பணத்திற்கு கீழ்ப்பட வேண்டும்.

அமைச்சருக்கு முறைமைகளை நடைமுறைப்படுத்த முடியுமாதல்.

10. (1) பின்வரும் ஒன்று அல்லது அனைத்து காரணங்கள் சம்பந்தமாக இச்சடடத்தின் கீழ் அமைச்சர் கட்டளைகளை பிறப்பிக்க முடியும்:-

(அ) ஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலையமாக ஏதாவது ஒரு இடம் பதிவு செய்தல் தொடர்பாக விண்ணப்படிவம் சமர்ப்பித்தல், பதிவுக்கான கட்டணங்கள் அறிவிடல் ;

(ஆ) அவ் விண்ணப்பப்படிவங்களின் பத்திரங்கள் மற்றும் அவற்றில் உள்ளடக்கி இருக்க வேண்டிய விவரங்கள் ;

(இ) இப்பதிவு செய்தல் செல்லுபடியாகும் கால எல்லை மற்றும் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தியதன் பின் அப்பதிவை புதுப்பித்தல் சம்பந்தமாக சான்றுகளை சமர்ப்பித்தல் ;

(ஈ) இப்பதிவு செய்தலை புதுப்பித்தல், நிராகரித்தல் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் ;

(உ) இப்பதிவு செய்தல், புதுப்பித்தல் அல்லது பதிவு செய்தலை புதுப்பித்தல் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை நிராகரிப்புச் செய்தலுக்கு எதிராக அல்லது பதிவு செய்தலை நிராகரிப்புச் செய்தலுக்கு எதிராக அமைச்சரிடத்தில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு சம்பந்தமாக அமைச்சரினால் அளிக்கப்படும் தீர்மானம், இறுதி தீர்மானமாக அமையும் ;

(ஊ) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத ஆரோக்கியசாலை, ஆயுர்வேத சிகிச்சை நிலையம், ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையம், ஆயுர்வேத ஔடத நிதி, மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருந்துகள் காப்பகம், ஆயுர்வேத மருந்துகள் விற்பனை நிலையம், ஆயுர்வேத நோய் நிவாரண நிலையம் சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் மற்றும் விதிகள் ;

(எ) அவற்றின் மூலம் நடாத்திச் செல்லப்படும் அறிக்கைகள், வங்கி அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள்;

(ஏ) குறிப்பிட்ட நிறுவனங்கள் சம்பந்தமாக காலத்திற்கு காலம் வழங்கக்கூடிய அறிக்கைகள் அவற்றுக்கு உள்ளடக்கிய அல்லது அவற்றின் மூலம் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை விவரம் மற்றும் அவற்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர் குழு சம்பந்தமான விவரங்களை உள்ளடக்கிய அறிக்கைகளில் அடங்க வேண்டிய விவரங்கள் ;

(ஐ) குறிப்பிட்ட நிறுவனங்களின் மூலம் அறவீடு செய்யக்கூடிய கட்டணங்கள் மற்றும் அறவீடு சம்பந்தமான நியமங்கள் ;

(ஒ) அவ் நிறுவனங்களுக்கு பிரவேசித்தல் மற்றும் பரிசீலனை செய்தல் சம்பந்தமான அதிகாரம் ;

(ஓ) குறிப்பிட்ட நிலையங்களை பதிவு செய்தல் தொடர்பான விடயங்கள் மற்றும் ஆணையாளரினால் வைத்திருக்கப்படும் மற்றும் நடாத்திச் செல்லப்படும் புத்தகம் ;

(ஔ) அவ் நிறுவனங்களில் சிகிச்சைபெறும் நபர்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் அவர்களை முறைப்படி பராமரித்தல் சிகிச்சை வழங்கல் மற்றும் சேவை வசதி.

11. (1) இச்சட்டத்தின் கீழ் அமைச்சர் பரிந்துரை செய்யும் விதிமுறைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

(2) இச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அனுமதிக்காத மாகாண சபையிடத்தில் சமர்ப்பிக்க வேண்டியதோடு, மாகாண சபையினால் அது அனுமதிக்கப்பட்ட பின்னர் அவ் அனுமதி வர்த்தமானி ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட வேண்டும். அவ் அனுமதியளித்தல் அறிக்கை வர்த்தமானியில் பிரசுரமான திகதியிலிருந்து அதிகாரம் பெறப்படும்.

*சுதந்திர ஆயுர்வேத மருந்தக நிலையம்.*

12. ஊவா மாகாணத்தின், மாகாண கட்டுப்பாடு திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சுதந்திர ஆயுர்வேத மருந்தக சாலைகளில் நோயாளிகளின் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும் மருந்துகளில் ஒரு தொகையை ஊவா மாகாண ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகள் மூலம் வழங்க முடியுமாயிருத்தல்.

*மூலிகைத் தோட்டங் களை நிறுவுதல்.*

13. (1) அருகி வரும் தேசிய மருந்துகள் மற்றும் மருத்துவ செடிகளை பராமரித்தல், அவற்றை அறிந்து கொள்ளல் சம்பந்தமாக பெயர் பலகையை நிர்மாணித்தல், மக்களை விழிப்புணர்வு செய்தல் இலக்கு செய்யப்பட்ட மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, மத்திய மருந்தக நிலையம், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களின் சூழலுக்குள் மூலிகைத் தோட்டங்களை நிர்மாணித்தல் மற்றும் ஔடத தாவரங்களை உருவாக்குவதற்கான அடிப்படைகளை முன்னெடுத்தல் ;

(2) மூலிகைத் தோட்டம் தயாரித்தல் சம்பந்தமாக அரசிடம் இருந்து காணியைப் பெற்றுக் கொள்ளும் போது 454 அதிகாரமான 1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச அவசர சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப காணியைப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் ;

(3) மூலிகைத் தோட்டத்தை நடாத்திச் செல்லல் மற்றும் நாற்று மேடைகளை நடாத்திச் செல்லல் மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் இங்கு குறிப்பிடப்படும் பிரதேச ஆயுர்வேத பராமரிப்பு சபை பொறுப்பு உடையதாகும் ;

(4) மருத்துவ செடிகளின் நாற்று மேடைகளில் இருந்து செடிகளை விற்பனை செய்தல் இவ் இயலின் கீழ் சட்டபூர்வமானதாகும்.

*மாகாண ஆயுர்வேத கல்வி மற்றும் முகாமைத்துவ பயிற்சி சபையை நிறுவுதல்.*

14. (1) இங்கு குறிப்பிடப்படும் சபையாக இனங்காணப்படும் மாகாண ஆயுர்வேத கல்வி மற்றும் முகாமைத்துவப் பயிற்சிகள் சபை எனும் பெயரைக் கொண்ட சபை நிறுவப்பட வேண்டும் ;

(2) அச்சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கி இருக்க வேண்டும் :-

(அ) ஆயுர்வேத ஆணையாளர் ;

(ஆ) பிரதி ஆயுர்வேத ஆணையாளர் அல்லது ஆயுர்வேத ஆணையாளரால் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரி ஒருவர் ;

(இ) தியதலாவ ஆயுர்வேத வைத்தியசாலை பணிப்பாளர் அல்லது மெதகம ஆயுர்வேத வைத்தியசாலை பணிப்பாளர் ;

(ஈ) ஏனைய ஆயுர்வேத நிலையங்களில் மற்றும் மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள நிறுவனங்களில் அமைச்சரின் சான்றுப்படுத்தலின்படி நியமிக்கப்பட்ட வைத்தியர்கள் இருவர் ;

(உ) அமைச்சரின் சான்றுப்படுத்தலின்படி தெரிவு செய்யப்பட்ட அரச மற்றும் அரச சேவையில் அல்லாத தேசிய, பாரம்பரிய அல்லது நிறுவனப் பயிற்சிபெற்ற வைத்தியர்கள் மூவர் ;

(ஊ) இவ் மாகாண ஆயுர்வேத கல்வி மற்றும் முகாமைத்துவ பயிற்சி சபையின் வேலைகள் சம்பந்தமாக பொருத்தமான யாப்பை தயார் செய்து தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சரின் ஒப்புதலோடு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(எ) அச்சபையின் ஆட்சிக் காலம் மூன்று ஆண்டுகளாக இருக்க வேண்டியதோடு மொத்த தொகை அத்தினத்தில் இருக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

*சபையின் அதிகாரங்கள்.*

15. பின்வரும் அதிகாரங்கள் முகாமைத்துவ பயிற்சி சபையிற்கு இருத்தல் வேண்டும்:-

(1) மாகாண ஆயுர்வேதத்திற்கான அரச பிரிவின் பயிற்சி தேவைகளை இனங்காணல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(2) மாகாணத்தின் பாரம்பரிய, தேசிய ஆயுர்வேத வைத்தியர்களின் பயிற்சி தேவைகளை இனங்காணல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(3) ஆயுர்வேத பிரிவிற்கு தொடர்பான ஏனைய சேவைகள் சம்பந்தமாக சிறந்த பயிற்சி நெறிகளை தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(4) ஆயுர்வேத கல்வியில் இணைபவர்களுக்காக புலமைப் பரிசில்கள், ஏனைய பரிசில்கள் மற்றும் உதவிகளை வழங்கல்.

(5) கல்வித் திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல்.

(6) பயிற்சி வேலைத் திட்டக்குழு ஒன்றை நியமித்து கொள்ளல் ;

(7) அங்கீகாரப்பத்திரம் அல்லது திறமைப்பத்திரம் வழங்கல் சம்பந்தமாக ஆயுர்வேத வைத்திய சபைக்கு வேண்டுகோள்களை முன்வைத்தல்.

16. (1) இங்கு குறிப்பிடப்படும் பரிசீலனை சபையாக இனங்காணப்படும் ஊவா மாகாண ஆயுர்வேத பரிசீலனை சபையின் பேரில் இனங்காணக்கூடிய நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

(2) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அல்லது இச்சட்டத்தின் 4.1 ஆம் பிரிவின்படி பிரதி ஆயுர்வேத ஆணையாளர் அமைச்சரினால் பரிசீலனை சபையின் பணிப்பாளராக நியமம் செய்யப்பட வேண்டும். மாகாண ஆயுர்வேத பரிசீலனை சபையை நிறுவுதல்.

(3) பரிசீலனை சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்:-

(அ) ஆயுர்வேத ஆணையாளர் ;

(ஆ) நாவின்ன ஆயுர்வேத பரிசீலனை நிறுவனத்தின் பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி ;

(இ) மாகாண ஆயுர்வேத ஆணையாளரினால் பெயர் குறிப்பிடப்படும் ஆயுர்வேத மக்கள் சுகாதார சேவைக்கு உரித்தான அதிகாரி ஒருவர் ;

(ஈ) விசேட வைத்தியர்களுள் அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் நியமிக்கப்படுபவர் ;

(உ) தியதலாவ ஆயுர்வேத வைத்தியசாலை பணிப்பாளர் ;

(ஊ) மெதகம ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரி ;

(எ) மாகாணம் அல்லது மாகாணத்தால் பரிபாலனம் செய்யப்படும் நிறுவனங்களில் சேவையிலுள்ள வைத்தியர்கள் இருவர் ;

(ஏ) பாரம்பரிய அல்லது ஆயுர்வேத தேசிய வைத்தியர்களுள் அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் நியமிக்கப்படும் வைத்தியர் ஒருவர்.

(4) பரிசீலனை சபையின் அதிகாரக் காலம் மூன்று வருடங்களாகும்.

கால எல்லை மூன்றில் ஒரு பகுதிக்கு குறையலாகாது ;

(5) மேலுள்ள மாகாண ஆயுர்வேத பரிசீலனை சபையின் வேலைகள் தொடர்பாக ஏற்புடைய யாப்பொன்று மாகாண ஆயுர்வேத ஆணையாளரினால் வழங்கப்பட்டு மாகாண தேசிய வைத்திய அமைச்சின் செயலாளர், மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சரின் ஒப்புதலின் பேரில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

17. ஆயுர்வேத வளர்ச்சி மற்றும் அது தொடர்பான வேலைகளை விருத்தி செய்யும் எண்ணப்படி ஆயுர்வேதத்தின் அனைத்து பிரிவுகளிலும் பரிசீலனை பணிகளை நடாத்தல் சம்பந்தமாக மற்றும் விசேடமாக பின்வரும் வேலைகள் சம்பந்தமாக வதைக்கூறல் மேலுள்ள 16.1 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்படும் பரிசீலனை சபைக்கு உரித்தாகும். அவ்வாறாயின். சபையின் செயற்பாடுகள்.

(1) பரிசீலனை கொள்கை ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தல் ;

(2) பாரம்பரிய அறிவை பாதுகாத்து முடியுமான ஆயுர்வேத நூதனசாலை ஒன்றை நிறுவி நடாத்திச் செல்லல் ;

(3) மருத்துவ செடிகள், பச்சிலை மருந்துகள், முடிவுற்ற மருந்துகள் மற்றும் வெவ்வேறு பாதுகாப்பு சம்பந்தமான பரிசீலனை நடவடிக்கைகளை நடாத்தல்.

(4) தீவிர நோய்கள், நோய்கள் மற்றும் அவற்றுக்கு பொருத்தமான சிகிச்சை முறைகள் சம்பந்தமாக காலத்தின் தேவைக்கேற்ப பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(5) ஆயுர்வேத பரிசீலனை மற்றும் அவ்வாறான பரிசீலனை நிறுவனங்கள் சம்பந்தமான முகாமைத்துவம்;

(6) பின்வருவன சம்பந்தமாக-

(i) ஆயுர்வேத இலக்கியம் ;

(ii) ஆயுர்வேத சாஸ்திர மூலதர்மம்;

(iii) ஆயுர்வேத இரசாயன வைத்திய முறைமை;

(iv) பழமைவாய்ந்த, சம்பிரதாய, கெம் முறை, மற்றும் ஏனைய அது தொடர்பான வெவ்வேறு சிகிச்சை முறை ;

(v) ஆயுர்வேதத்திற்கு சமீபமான வேறு தேசிய இயற்கை, வைத்திய முறைமை பற்றிய பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(7) ஆயுர்வேத திரவிய குண சாஸ்திரம் பற்றிய பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(8) தாவரவியல் ஆயுர்வேதம் மற்றும் விலங்கியல் ஆயுர்வேதம் சம்பந்மாக பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(9) ஆயுர்வேத வைத்திய சபையினால் காலத்திற்கு காலம் செய்யப்படும் பரிசீலனை நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய நியமங்களை கடைப்பிடித்தல், பரிசீலனை கொள்கைகளை முன் வைத்தல் போன்றவை பரிசீலனை சபையின் உரிமையாகும் ;

(10) ஆயுர்வேதத்திற்கு தேவையான மூலிகைத் தாவரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சிகள், கிருமிகள் சம்பந்தமாக அவதானித்தல், மற்றும் அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

18. பின்வரும் அதிகாரங்கள் பரிசீலனை சபை ஒன்றுக்கு இருத்தல் அவசியம்.

சபையின் அதிகாரங்கள்.

(1) பரிசீலனை நிறுவனம், பரிசீலனை வேலைகள் மற்றும் பரிசீலனை சம்பந்தமாக அதிகாரம் பெற்றுள்ள விதி முறைகளை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கல் ;

(2) ஒவ்வோர் ஆண்டுகள் தொடர்பாகவும் ஆலோசனை செய்யப்பட்ட பரிசீலனை வேலை முறைமைகளை தயாரித்தல், மேலே நடைமுறைப்படுத்தும் பரிசீலனை காட்சிகளை தொடர்ந்து நடாத்திச் செல்லல் ;

(3) அக்கொள்கை பிரகடனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஆயுர்வேத பரிசீலனை நிறுவனங்கள் சம்பந்தமாக பரிபாலன சபையை நிறுவுதல் மற்றும் அதற்கு ஏற்ற வகையில் யாப்பை உட்படுத்தல் ;

(4) ஆயுர்வேத நடவடிக்கைகள் சம்பந்தமாக தேவைப்படும் என பரிசீலனை சபையினால் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய பாரம்பரிய மற்றும் ஏனைய பொருந்தக்கூடும் என பரிசீலனை சபை எண்ணும், தற்காலிக உள்ளக விடய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் ;

(5) நிறுவனங்களிலுள்ள மக்கள் குழுக்களின் உதவியை பெற்றுக் கொள்ளல் ;

(6) ஆயுர்வேத திணைக்களத்தின் தலைமையில் நடைபெறும் ஒரு பரிசீலனையின் முடிவு ஆயுர்வேத திணைக்களத்திற்கு புறம்பான ஏதாவது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நபர் ஒருவர், அல்லது பலர் அல்லது நிறுவனம் ஒன்று பிரயோசனம் அடையுமாயின், அது சம்பந்தமாக நிதி அல்லது அதற்கு சமமான இலாபத்தை பெற்று கொள்வதற்கு உரிமை உள்ளதோடு, அதற்குத் தேவையான செயற்பாட்டு வழிமுறைகளுக்கு நுழையும் உரிமை ;

(7) மேல் குறிப்பிட்டுள்ள வேலைகள் பூர்த்தி செய்து கொள்வது சம்பந்தமாக காலத்திற்கு காலம் நிச்சயம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் குழு ஒன்றை நியமம் செய்ய வேண்டும்.

19. (1) இங்கு குறிப்பிடப்படும் விமர்சன சபையாக இனங் காணப்படும் மாகாண ஆயுர்வேத மருந்துகள் விமர்சன சபை ஒன்று நிறுவப்படல் வேண்டும். மாகாண ஆயுர்வேத மருந்துகள் விமர்சன சபை.

(2) இக்கொள்கையில் 4.1 ஆம் பிரிவின்படி பிரதி அல்லது உதவி ஆயுர்வேத ஆணையாளர்களுள் ஒருவர் அமைச்சரினால் மருந்தக விமர்சன சபையின் பணிப்பாளராக நியமிக்கப்படுவர் ;

(3) மருந்தக விமர்சன சபையில் பின்வரும் அங்கத்தவர்கள் அங்கம் வகிக்க வேண்டும்.

(அ) மாகாண மருந்துகள் உற்பத்தியகத்தின் பிரதான வைத்திய அதிகாரி ;

(ஆ) மாகாண மருந்துகள் உற்பத்தியகத்தின் பிரதான மருந்துகள் வழங்குநர் ;

(இ) மாகாணத்தின் ஆயுர்வேத கல்வி நிறுவனங்களின் வைத்திய குழுவில் அமைச்சரின் அங்கீகாரத்தின்படி தீர்மானிக்கப்படும் வைத்தியர் ஒருவர் ;

(ஈ) மாகாணத்துள் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியக தலைவர்களில் அமைச்சரின் அங்கீகாரத்தின்படி நியமிக்கப்படும் ஒருவர்.

(4) மாகாண ஆயுர்வேத மருந்தக விமர்சன சபையிற்கு பின்வரும் அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(அ) மாகாணத்துள் மருந்தக விமர்சன பத்திரிகை ஒன்றை நிர்மாணித்து அதனை நடைமுறைப்படுத்தல்;

(ஆ) மாகாணத்துள் மருந்துகளை விநியோகித்தல் மற்றும் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரல்;

(இ) மாகாணத்துள் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியகம், மேற்பார்வையினை கட்டுப்படுத்தல் மற்றும் நியமங்களை அறிமுகப்படுத்தல் ;

(ஈ) மருந்துகளின் பௌதீகத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் அழிவுகளுக்கு உட்படாமையையிட்டு அங்கீகாரம் வழங்கல் ;

(உ) அனைத்து ஆயுர்வேத மருந்து வகைகளும் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம், அது சம்பந்தமாக திருத்தி அமைக்கப்பட்ட சட்டம் மற்றும் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கோவையின் சட்ட விதிமுறைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகிறதா என கண்காணித்தல் ;

(ஊ) உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏனைய சட்ட திட்டங்களுக்குட்பட்டு காணப்படும் உற்பத்திகள் சம்பந்தமாக சட்ட ரீதியாக செயற்படுதல் தொடர்பாக ஆயுர்வேத ஆணையாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல் ;

(எ) ஆயுர்வேத மருந்துகள் சம்பந்தமாக, ஔடத நிதி நடாத்திச் செல்லல் சம்பந்தமாக தற்போது நடைமுறையிலுள்ள ஏனைய சட்டபூர்வமான ஒதுக்க நிதிகளை இனங்காணல், இனங்காட்டல் மற்றும் நடைமுறைப்படுத்தச் செய்தல் ;

(ஏ) ஆயுர்வேத முடிவுற்ற மருந்துகள், உலர்ந்த மற்றும் பச்சிலை மருந்துகள், ஏற்றுமதி செய்தல் மற்றும் ஊவா மாகாணத்திற்கு உரித்தான மருத்துவ தாவரங்களுக்கு அதிகார உரிமைப் பத்திரம்பெற்றுக் கொள்ளல் மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் அங்கீகாரத்தின் படியும் மாகாண அமைச்சின் செயலாளரின் அனுமதியின்படியும் இடம்பெற வேண்டும் ;

(ஐ) ஊவா மாகாணத்தில் இருக்கும் இயற்கை மருந்துகள் மாகாணத்திற்கு வெளியே வழங்கல் சம்பந்தமாக தேவையான அதிகார பத்திரங்களை வெளியிடல், அங்கீகாரமளித்தல் மற்றும் அதிகாரப்பத்திர கட்டணங்களை நியமம் செய்தல்.

*அனைத்து சபைகள் தொடர்பான பொதுவான விடயங்கள்.*

20. (1) அனைத்து சபைகளுக்குமான அதிகார காலம் குறிப்பிட்ட மூன்று ஆண்டுகள் ஆகும்.

(2) அமைச்சரின் விருப்பத்தின்படி சபைகளின் அதிகார காலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் பின் முடிவுக்கு கொண்டு வரப்படும் ;

(3) சபையில் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் இருக்க வேண்டும் ;

(4) அனைத்து சபைகளிலும் கூட்டம் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது நடாத்தப்பட வேண்டும் ;

(5) சபைகளின் கூட்டங்களின் தவணைக்காக அங்கத்தவர்கள் சம்பந்தமாக அமைச்சரால் அனுமதியளிக்கப்படும் ஊதியம் ஒன்று கொடுக்கப்பட வேண்டும் ;

(6) கூட்டங்களுக்கு மூன்று தடவைகள் சமுகமளிக்காத அங்கத்தவர்களை ரத்து செய்வதற்கான காரணமாக அமையும்.

*ஆயுர்வேத வைத்தியசாலை சங்கம் நிறுவுதல்.*

21. (1) ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் ஊடாக தரம் வாய்ந்த சேவையொன்றை பெற்றுக் கொடுத்தல், அந் நிறுவனங்களின் அபிவிருத்தி, அதற்குத் தேவையான வசதிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக, பொதுமக்களிடத்தில் நெருங்கிய தொடர்பொன்றை ஏற்படுத்தலும். இலக்குகளுள்ள அனைத்து ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் ஆயுர்வேத மத்திய மருந்தகம் போன்றவற்றிற்கு அருகிலேயே வைத்தியசாலை அபிவிருத்தி சங்கங்களை நிறுவ வேண்டும்.

(2) ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் கீழே குறிப்பிடப்படுபவர்களினை உள்ளடக்கி இருத்தல் வேண்டும் ;

(அ) வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் நிலைய பொறுப்பு வைத்தியராக இருக்க வேண்டியதோடு, மாகாண ஆயுர்வேத ஆணையாளர், மாகாண பரிபாலிப்பு நிறுவனங்களின் தலைவர் மற்றும் பிரதேச செயலாளர் இச்சபையில் ஆலோசகர்களாக அதிகார பூர்வமாக நியமிக்கப்படுவர் ;

(ஆ) வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் அழைப்பவர், சங்கத்தின் செயலாளராக இருத்தல் வேண்டும் . சங்க உறுப்பினர்களுள் செயலாளர் தெரிவு செய்யப்படுவார்.

22. பின்வரும் நபர்கள் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டும். சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகக்கூடியது 25 ஆக மட்டுப்படுத்தபட வேண்டும்.

(1) ஆகக்கூடியது 05 ஆகுமாறு வைத்தியசாலையை உரித்தான பிரதேசங்களின் நிறுவன தலைவர்கள் ;

(2) ஆகக்கூடியது 03 ஆகுமாறு அதிகார பிரதேசங்களுக்கு உரித்தான பாதுகாப்புப் பிரிவுத் தலைவர்கள் ;

(3) ஆகக்கூடியது 8 ஆகுமாறு சுயேட்சை குழுக்களின் தலைவர்கள் (மதத் தலைவர்கள், வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், நன்கொடையாளர்கள்) ;

(4) ஆகக்கூடியது 05 ஆகுமாறு வைத்தியசாலை ஊழியர் சபை ;

(5) சங்கத்தின் எஞ்சியுள்ள அங்கத்தினரை பிரதேச மக்களில் இருந்து தெரிவு செய்ய வேண்டும்.

*ஒதுக்க நிதிகளுக்கான கணக்கு வைப்பு மற்றும் கணக்காய்வு.*

23. (1) வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் ஒன்றுக்கு வைத்தியசாலை அபிவிருத்தி திரட்டு நிதியம் ஒன்றினை நடாத்திச் செல்ல வேண்டியதோடு, அதற்கான கணக்குகளை முறைப்படி பேண வேண்டும்.

(2) இத் திரட்டுநிதிய கணக்காய்வு சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டம் உரித்துடையது ஆகும் ;

(3) திரட்டு நிதியத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க வருடமொன்றாகும் ;

(4) மேலுள்ள வைத்தியசாலை சங்கத்தின் வேலைகள் மற்றும் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற யாப்பொன்றை தயார் செய்து தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சரின் ஒப்புதலின் பேரில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் ;

(5) திரட்டு நிதியத்தில் ரூபா பத்தாயிரத்தில் இருந்து ரூபா ஐம்பதாயிரம் வரை செய்யப்படும் செலவீடு சம்பந்தமாக மாகாண ஆயுர்வேத ஆணையாளின் பூரண அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியதோடு, அதற்கு மேலாக அதிக தொகை செலவிடப்படும் போது விடய பொறுப்பு அமைச்சின் செயலாளரிடத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

24. (1) அனைத்து அங்கத்தினரினதும் சேவை காலம் மூன்று வருடங்களாகும். சங்கத்தின் அதிகாரகாலம் மற்றும் செயற்பாடுகள்.

(2) வைத்தியசாலை சங்கமொன்றுக்கு அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் நீக்கம் செய்தலின் அதிகாரம் மற்றும் சங்கத்தை கலைப்புச் செய்தலுக்கான அதிகாரம் போன்றவை அமைச்சருக்கு உரியதாகும் ;

(3) சங்கத்தின் வேண்டிய உறுப்பினருக்கு வேண்டிய நேரத்தில் அமைச்சருக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றினால், கோரிக்கை விடுத்து விலக முடியும். அக்கோரிக்கையை ஏற்றல் அல்லது நிராகரித்தல் அமைச்சரின் சுய விருப்பத்தின் பேரில் இடம்பெறும் ;

(4) சங்க கூட்டத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் இருக்க வேண்டும் ;

(5) சபைத் தலைவர் கூட்டங்களின் போது முதலிடத்தை வகிக்க வேண்டியதோடு, அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் சங்க உறுப்பினர்களின் பெரும்பான்மையான விருப்பின் படி நியமிக்கப்படும் சபைத் தலைவருக்கு சங்கத்தில் பணியாற்றிச் செல்ல அதிகாரம் உள்ளது. அச் சங்கத்தினால் எடுக்கப்படும் தீர்மானம் அதிகாரபூர்வமானதாக இருத்தல் வேண்டும் ;

(6) சங்கம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டியதோடு, சங்க கூட்டறிக்கை செயலாளரினால் மாகாண ஆயுர்வேத ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

(7) சங்கத்தின் உறுப்பினர் ஒருவரின் அல்லது உறுப்பினர்களின் துணைவர் அல்லது குடும்ப உறுப்பினர் மாகாண ஆயுர்வேத வைத்தியசால சம்பந்தமாக எந்தவொரு வழங்களிலோ, கொள்வனவிலோ ஒப்பந்தமொன்றிலோ இணைந்து இருத்தல் கூடாது ;

(8) மேலுள்ள 7 ஆம் பிரிவின்படி தடை செய்யப்பட்ட வேலையொன்றினை செய்தால் அது சம்பந்தமான பரிசீலனை ஒன்றின் பின்னர் அவ் உறுப்பினரை நீக்கம் செய்வது தொடர்பான சான்றுகள் சங்கச் செயலாளரினால் அமைச்சரிடத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

(9) சொந்த வேலை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் நிறுவன தலைவரினால் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருக்கும் காலத்திற்குள் தவிர சங்க உறுப்பினர் தனியாக எந்த ஒரு நேரத்திலும் நிறுவனத்துட் பிரவேசித்தல் அல்லது பரிசீலனை செய்தலினை செய்யாதிருத்தல் வேண்டும்.

25. ''ஆளுநர்'' என்பவர், ஊவா மாகாண ஆளுநர் ஆவார். கருத்துத் தெரிவு.

''அமைச்சு சபை'' என்பது, ஊவா மாகாண சபையின் அமைச்சர் சபையினைக் குறிக்கும்.

''அமைச்சர்'' என்பதில், ஊவா மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சர் குறிப்பிடப்படுவார். மாகாண சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஊவா மாகாண சுகாதார வைத்திய விடய பொறுப்பு அமைச்சராக ஊவா மாகாண கௌரவ ஆளுநர் குறிப்பிடப்படுவார். ''பிரதான செயலாளர்'' என்பதில், ஊவா மாகாண பிரதான செயலாளர் குறிப்பிடப்படுவார்.

''செயலாளர்'' என்பதில், ஊவா மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிடப்படுவார்.

''ஆணையாளர்'' என்பவர் ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் குறிப்பிடப்படுவார்.

''மாகாண நிர்வாக நிறுவனம்'' என்பது ஊவா மாகாண நகர சபை மற்றும் பிரதேச சபை குறிப்பிடப்படும்.

''ஆயுர்வேதம்'' என்பது, ஆயுர்வேதம், சித்த, யூனானி தேசிய சிகிச்சை வைத்திய முறைமைகள் மற்றும் சத்திர சிகிச்சை, பஞ்சகர்ம சிகிச்சை முறை, ஸ்பா (Spa) சிகிச்சை, அந்தந்த நாடுகளுக்கு தேசியமயமான, அந்தந்த நாடுகளின் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை, வேறு வைத்திய முறைமைகள் உள்ளடக்கப்படுவதோடு, உடலியல், இயற்கை தேசிய மாற்று வழிகள் சமாந்திர, கீழைத்தேய பாரம்பரிய, பூரண அல்லது அதற்கு சமமான விளக்கத்தை தரும் இலங்கையிற்குள் நடைமுறைப்படுத்தும் ஏதாவது சிகிச்சை முறைமைகள் அல்லது நோய் நிவாரண அல்லது சுகாதார வழங்கல் முறைமை அல்லது முறைமைகளோ உள்ளடங்கும்.

''தேசிய வைத்தியர் அல்லது பாரம்பரிய வைத்தியர் '' என்பது, இங்கு பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்படாத ஊவா மாகாணத்தை வதிவிடமாக கொண்ட அனைத்து தேசிய வைத்தியர்களும் குறிப்பிடப்படுவர்.

''இணைக்கப்பட்ட வேறு சேவைகள் '' என்பது, பழமைவாய்ந்த சாத்திரங்கள், சம்பிரதாய முறைகளில் ஈடுபட்டுள்ளோர் என குறிப்பிடப்படுவர்.

''மூலிகைத் தோட்டம் '' என்பது, தேசிய பாரம்பரிய மற்றும் ஆயுர்வேத வைத்திய விஞ்ஞானம் சம்பந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மரங்கள் செடி வகைகள் உள்ளடங்கிய தோட்டங்கள் இங்கு குறிப்பிடப்படும்.

மொழிப் பிரயோகம்.

26. இக் கொள்கை பிரகடனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதாவது முரண்பாடு காணப்படின், அவ்வேளைகளில் சிங்கள மொழி ஏற்புடையதாக கருதப்படும்.

6- 408

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.